பேரணாம்பட்டு பீடித் தொழிலாளர்கள், பேரணாம்பட்டு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையிலேயே சிகிச்சை பெற மத்திய அரசுக்கு கருணை உள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

19—

எமனேஸ்வரத்தில் இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஆரம்பித்தல்

33496—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரத்தில் இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று ஆரம்பிக்க அரசுக்குப் பரிந்துரை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதியில் எமனேஸ்வரத்தில் இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று ஆரம்பிக்க அரசுக்கு பரிந்துரை ஏதும் வரவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவே நாட்டுயர்வு என்ற சொல்லுக்கு இலக்கணமாக இன்றையதினம் ஆட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில், பரமக்குடி நகர் மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் கிளை ஒன்றை ஆரம்பித்து இருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாது இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் மகளிர் கிளை ஒன்றையும் பரமக்குடி நகரில் ஆரம்பித்து இருக்கிறார்கள்.

1994 நவம்பர் 4]

இன்றையதினம், பரமக்குடி நகராட்சியானது வைகை ஆற்றின் வட பகுதி பரமக்குடி என்றும், தெற்குப் பகுதி எமனேஸ்வரம் என்றும் இரண்டு பகுதிகளை உள்ளடங்கியதாக இருக்கின்றது. எமனேஸ்வரம், 30 ஆயிரம் மக்கள் ஜனத்தொகை கொண்ட ஊராக இருந்து வருகிறது. அங்கே 15--க்கு மேற்பட்ட கைத்தறி கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்கள் இயங்கி வருகின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் கேள்வியையே ஒரு பரிந்துரையாக ஏற்று, அங்கே மக்களுக்கு பல்வேறு காலகட்டங்களில் உதவி செய்து வருகின்ற மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றை ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளை ஒன்று ஒரு பகுதியிலே துவக்கப்பட வேண்டுமென்றால், அதற்குக் குறைந்தது 50 லட்ச ரூபாய் வைப்பு நிதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த வங்கியினுடைய கிளை தன்னைத் தானே பாதுகாத்துக்கொண்டு, மக்களுக்குப் பணிபுரிகின்ற அந்த நிலையில் இருக்கும். அந்த நிலையில் பார்க்கின்றபோது, இன்றைக்கு அந்தப் பகுதியிலே மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளை ஒன்று துவக்கப்படுவதற்கு எந்தவிதமான வாய்ப்புகளும், வசதிகளும் இல்லை. ஏற்கெனவே மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று, எமனேஸ்வரத்திலே உள்ள 20 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் கணக்குகளை பரமக்குடியிலுள்ள கிளையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, எமனேஸ்வரம் பகுதியிலே, அதற்குப் பக்கத்திலே 2 கிலோ மீட்டர் தொலைவிலே 9 வங்கிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே இங்கே ஒரு மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளை தொடங்கப்படுமானால், இங்கே அந்த வங்கிக்கு எந்தவிதமான வியாபாரமும் கிடைக்காது. அந்த வங்கி தன்னைத்தானே காத்துக் கொள்ளாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.05

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது சொன்னார்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளைக் காட்டிலும் மத்திய கூட்டுறவு வங்கிகள் தான் ஏழை எளிய மக்களுக்கு கடன் கொடுப்பதற்கு முன் வருகின்றன என்று. அந்த நோக்கோடு பார்க்கிறபோது எமனேஸ்வரம் பகுதி ஏழையெளிய மக்கள் அதிகமாக

வாழ்கிற பகுதியாகும். அங்கே தேசியமயமாக்கப்பட்ட பல வங்கிகள் இருந்தாலும் ஐ.ஆர்.டி.பி. போன்ற பல கடன்களை அவை கொடுப்பதற்கு முன்வரவில்லை. எமனேஸ்வரம் பகுதியில் யூனியன் வங்கியின் கிளை ஒன்று செயல்பட்டு வருகிறது. எல்லா வங்கிகளும், பாரத ஸ்டேட் வங்கி, கனரா வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி போன்ற வங்கிகள் எல்லாம் பரமக்குடியில்தான் கிளைகளை வைத்திருக்கின்றன. மத்திய கூட்டுறவு வங்கி கூட 3 கிளைகளை பரமக்குடி மாநகரில் வைத்திருக்கிறது. எமனேஸ்வரம் பகுதியில் ஏழையெளிய மக்களுடைய வசதியைக் கருதி கைத்தறி நெசவாளர்களுடைய கூட்டுறவுச் சங்கங்களின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே கிளை ஆரம்பித்தால், வைப்பு நிதியெல்லாம் கிடைக்க ஏதுவாக அமையும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, எமனேஸ்வரம் பகுதியில் ஒரு மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளை ஆரம்பிப்பதற்கு அடுத்த ஆண்டாவது முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எமனேஸ்வரம் பகுதியில் இருக்கிற யூனியன் பாங்க் ஆப் இந்தியா என்கிற அந்த வங்கியினுடைய கிளை 1970 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, இன்றைக்கு 24 ஆண்டுகள் முடிந்த பிறகு கூட, 13 இலட்சம் ரூபாய் அளவில் தான் நகைக் கடன் கேட்டிருக்கிறார்கள். ஆகவே வங்கியினுடைய சேவை அங்கே தேவைப்படவில்லை என்பதை நாம் நன்றாக உணர்கிறோம். அதுமட்டுமல்லாமல், ஏழையெளிய மக்களுக்கு கூட்டுறவு வங்கிகள் உண்மையிலேயே பணிபுரிகின்றன. ஆனால் ஏழையெளிய மக்களுக்கு பணிபுரியக்கூடிய வாய்ப்பு இல்லாத இடங்களில் கிளையை ஆரம்பித்து இந்த கூட்டுறவு வங்கியே ஏழையாக மாறிவிடக் கூடாது என்ற எண்ணம் கூட்டுறவுத் துறைக்கு இருக்கிறது. ஆகவே, இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடிய கோரிக்கையாக தற்போது இல்லை. அங்கேயிருக்கிற எமனேஸ்வரம் பகுதியில் நெசவாளர்கள் இருக்கிறார்கள், 20 கூட்டுறவு நெசவாளர் வங்கிகள் இருக்கின்றன. அங்கே வியாபாரத் துறையில் ஈடுபட்டுருக்கிற மக்கள் குறைவு. மற்ற மற்ற வருவாய்களும் அந்தப் பகுதியில் குறைவு. ஆகவே, இன்னொரு வங்கியின் கிளையை அங்கே ஆரம்பிப்பதற்கு இப்போது கூட்டுறவுத் துறைக்கு உத்தேசம் இல்லையென்றாலும், சூழ்நிலைகள் மாறுமேயானால், அந்தச் சூழ்நிலைக்கேற்ப அங்கே ஒரு வங்கியினுடைய கிளை திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 நவம்பர் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, திரு. சோ. பாலகிருஷ்ணன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

20—

முதுகுளத்தூர் ஆதிதிராவிட மாணவர் விடுதிக் கட்டிடத்தைப் பழுதுபார்த்தல்.

***17472—திரு.** *சோ. பாலகிருஷ்ணன்:*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் உள்ள ஆதிதிராவிட மாணவர் விடுதிக் கட்டிடத்தைப் பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதியை ரூ. 93,500 செலவில் பழுது பார்ப்பதற்கான மதிப்பீடுகள் சென்னை தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து அரசுக்கு வரப்பெற்று பரிசீலனையில் உள்ளது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1964 ஆம் ஆண்டு தென்னாட்டு காந்தி என்று மதிக்கப்பட்ட நம்முடைய கக்கன் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட அந்த விடுதி வெறும் 50 மாணவர்களுக்காக கட்டப்பட்ட மிகச் சிறிய விடுதி. இன்று 150 மாணவர்களுக்கு மேல் வாழ்கிற அந்த விடுதியை ஒரு நிரந்தர விடுதியாக புதியதாக கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்று அந்த விடுதி மிக மோசமான நிலையில், பாம்புகள் போன்ற விஷப்பூச்சிகள் பரவுகிற இடமாகவும், செடி கொடிகள் நிறைந்த இடமாகவும் இருக்கிற காரணத்தால், உடனடியாக அந்த இடத்தை இடித்து, மிகப்பெரிய அளவில், 150 மாணவர்கள் தங்கி வாழ்கிற அளவுக்கு ஒரு சிறந்த விடுதியாக கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.